**செய்தி வெளியீடு எண்: 324** **நாள்: 07.06.2019**

**தமிழ்நாடு அரசு**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

**தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) மாணவர்கள் சேர்க்கை அறிவிப்பு**

2019–ஆம் ஆண்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரவும் அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் சுயநிதி தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் மாணவர்கள் சேர்ந்திடவும் மாவட்ட கலந்தாய்வு மூலம் நடைபெறும் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் 31.05.2019 வரை www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் பெறப்பட்டு வந்தன. தற்போது இதற்கான காலக்கெடு **15.06.2019** வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மதிப்பெண் அடிப்படையில் நடைபெறும் மாவட்ட கலந்தாய்வுக்கான தரவரிசை பட்டியல் மற்றும் கலந்தாய்வு நடைபெறும் நாள், தேதி, இடம் உள்ளிட்ட விவரங்கள் இதே இணையதளத்தில் வெளியிடப்படும். மேலும் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள அலைபேசி எண்ணிற்கும் குறுஞ்செய்தி அனுப்பப்படும். இணையதளத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்த தொழிற்பயிற்சி நிலையங்களில் மாவட்ட கலந்தாய்வு நடைபெறும் என்ற விவரம் தரப்பட்டுள்ளது. கலந்தாய்வு நடைபெறும் நாளில் மாணவர்கள் தாங்கள் விண்ணப்பித்துள்ள மாவட்டத்தில் உள்ள Nodal ITI-க்கு சென்று Single Window முறையில் தாங்கள் சேர விரும்பும் தொழிற்பிரிவு மற்றும் தொழிற்பயிற்சி நிலையம் ஆகியவற்றை செய்யலாம்.

இது குறித்த கூடுதல் விவரங்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம் அல்லது தங்களுக்கு அருகாமையில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தொடர்பு கொண்டு விவரம் பெறலாம்.

தொலைபேசி எண் : 044–22501006 (Extension 210, 211, 109).
Email ID : detctsection@gmail.com

ஆணையர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**